"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சிஅலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 30.05.2022.

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், வைகாசி மாதம் 16 - ம் நாள் 30.05.2022-ம் தேதி திங்கள் கிழமை மாலை 03.00 மணி அளவில் நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:-

அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/அர் 1 நாள்.01.04.2022–இன்படி 2022–2023–ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டு (01.04.2022) முதல் பொது சொத்துவரி சீராய்வு செய்திட உத்தரவிடப் பட்டுள்ளது. அதன்பேரில் தொடர் நடவடிக்கையாக தேனி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் வாயிலாக நாளிதழ்களில் விளம்பரம் செய்தல், அரசிதழிலில் அறிவுப்பு வெளியிடவும், சொத்துவரி வரிவிதிப்புக்களுக்கான சுய மதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டுத்தாள்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சிட்டு பெறுவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு (இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 581 / 2022 / அ1**

**தீர்மான எண்** : 16
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 02:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2019 - 2020 ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10 மற்றும் 24 - ல் சிறுபாலங்கள் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|
| 1 | தினமணி நாளிதழ் ( Express Publications ( Madurai ) Private Limited., | 15271.00 |

மேற்கண்ட தொகை ரூ. 15271/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> **:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 163 / 2018 / **இ1**
**தீர்மான எண் :** 17
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 03:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 ம் ஆண்டு 15வது நிதிக்குழு **(** Tied Grant **)** திட்டத்தின் கீழ் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 4 எண்ணம் LCV வாகனங்கள் வாங்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|
| 1 | விடுதலை நாளிதழ், Business Line நாளிதழ் ( Flame Advertising Company Private Limited ) | 15404.00 |

மேற்கண்ட தொகை ரூ. 15404/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 163 / 2018 / **இ1**
**தீர்மான எண் :** 18
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04:-

தேனி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019 - 2020-ம் ஆண்டின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10 மற்றும் 24 - ல் சிறுபாலங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 20.04.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மாணிக்கம், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 17,52,459.91 | 17,51,090.50 | 0.07 % குறைவு |
| 2 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | | 17,74,330.00 | 1.25 % கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.07% குறைவான விலை விகிதம் கோரிய **திரு.எஸ்.மாணிக்கம்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 537 / 2022 / இ1**
**தீர்மான எண் :** 19
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 05:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் காமராஜர் பேருந்து முனைய தங்கும் விடுதியினை காலநீட்டிப்பு செய்து வழங்கிட கோரி குத்தகைதாரர் திரு.K.ராமநாதன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்: WP (MD) No. 19117 / 2021 தொடரப்பட்டது.

மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலித்து உத்தரவு வழங்கிட நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.K.ஹேம கார்த்திகேயன் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார், மேலும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ: 10,000/- வழங்கிட கோரியுள்ளார். மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3173 / 2021 / அ-3**
**தீர்மான எண் :** 20
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 06:-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி 07-07-2021 அன்று நடைபெறவிருந்த குத்தகை இனங்களுக்கான பொது ஏல அறிவிப்பு / ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து திரு.K.சுரேஷ்குமார் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்: WP (MD) No. 11670/2021 தொடரப்பட்டு, மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் மனுதாரருக்கு உரிய அறிவிப்பு வழங்கிட 15-07-2021 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.K.ஹேம கார்த்திகேயன் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார், மேலும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ: 10,000/- வழங்கிட கோரியுள்ளார். மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3138 / 2021 / அ-3**

**தீர்மான எண்** : 21

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 07:-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண்: 1, 2, 15, 16, 5, 8, 10, 12A மற்றும் 17 ஆகிய கடைகளை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலையில், மீண்டும் தங்களுக்கு காலநீட்டிப்பு செய்து வழங்கிட கோரி குத்தகைதாரர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1 | WP (MD) No. 20794 / 2021 | G.நல்லம்மாள் | காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண் : 5 மற்றும் 17 |
| 2 | WP (MD) No. 20795 / 2021 | சுகன்யா | காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண் : 8 |
| 3 | WP (MD) No. 20796 / 2021 | சுரேஷ் | காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண் : 12 A |
| 4 | WP (MD) No. 20797 / 2021 | குணசேகரன் | காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண் : 10 |

மனுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலித்து உத்தரவு வழங்கிட நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.K.ஹேம கார்த்திகேயன் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார், மேலும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ: 40,000/- வழங்கிட கோரியுள்ளார். மேற்கண்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3465 / 2021 / அ-3**

**தீர்மான எண்** : 22

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 08:-</u>**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO. **4821/2022** இல் தேனி–அல்லிநகரம் நகராட்சி ஆணையாளருக்கு எதிராக திரு.ப.பஞ்சவர்ணம், க/பெ.பாண்டி அவர்கள் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு ஹேமகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், அதற்குண்டான செலவு தொகையை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு.</u>

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி வழக்கினை நடத்திட எடுத்த நடவடிக்கை அனுமதிக்கலாம்.
3 வழக்கு கட்டணம் வருவாய் நிதியில் ஈடு செய்யலாம்

**ந.க.எண்.737/2022/ எப்-1**
**தீர்மான எண் :** 23
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 09:-</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் இந்நகர்மன்றத் தீர்மான எண். 11, நாள். 08.04.2022 - ன்படி ரூ. 8.55 இலட்சத்திற்கு புதியதாக ஒரு பொலிரோ ஈப்பு வாகனம் வாங்குவதற்கு அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 1725 / 2022 / எம்3, நாள்.06.05.2022-ன்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வாகனம் ரூ.16,82,000/- மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட ( GEM RATE ) விலைக்கு வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.16,82,000/-க்கு ஸ்கார்பியோ வாகனம் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 578 / 2022 / இ1**
**தீர்மான எண் :** 24
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 10:-

இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகன ஓட்டுனர் திரு. ஆர். வீரு பொம்மமையன் அவர்களது 05.05.2022 ம் தேதிய விண்ணப்பத்தில், இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகன TN. 60 A. 7810க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு 05.05.2022 ம் தேதியில் தேனி, வட்டாரப்போக்குவரத்து துறையில் உரிய தொகை ரூ. 25695/- ஐ தனது சொந்த செலவில் செலுத்தப்பட்டது எனவும், மேற்கண்ட செலுத்தப்பட்ட தொகையை தனக்கு திரும்ப வழங்கிட கோரியுள்ளார். எனவே, அன்னாருக்கு மேற்கண்ட செலவினத்தொகை தொகைரூ. 25695/-ஐ வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 411 / 2022 / இ2**
**தீர்மான எண் :** 25
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 11:-

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 - ம் ஆண்டு தேசிய நகர்புற நலக்குழுமம் திட்டத்தில் ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டில் பொம்மையகவுண்டன் பட்டியில் இயங்கி வரும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதல் மாடியில் புதிதாக கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 29.03.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | கே.ஏ.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 21,04,154.14 | 22,08.986.60 | 4.98 % கூடுதல் |
| 2 | இ.எஸ்.பில்டர்ஸ், தேனி | | 22,30,300.20 | 5.99 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள **கே.ஏ.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 4.98 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரப்பட்டது. அதன்படி **கே.ஏ.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** என்ற நிறுவனம் பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக ஏற்கனவே மொத்த மதிப்பீட்டினை காட்டிலும் 4.98% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை தற்போது மாற்றம் செய்து மதிப்பீட்டினை காட்டிலும் 4.95% கூடுதலாக இப்பணியினை செய்து தருவதாக தெரிவித்து, ஏற்கனவே குறிப்பிட்டுள்ள தொகையினை காட்டிலும் தற்போது குறைத்து விலை விகிதம் குறிப்பிட்டுள்ளதாலும், இதற்கு மேல் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி தற்போது கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.95 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள **கே.ஏ.ஆர் கன்ஸ்ட்ரக்சன்ஸ்** என்ற நிறுவனம் ஒப்பந்தக்குழுவில் கலந்து கொண்டு தற்போது மாற்றம் செய்து கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.95 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் அதனை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியினை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு

உடனடியாக பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை விட 4.95 % கூடுதலாக கோரிய ஒப்பந்தப் புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 412 / 2022 / இ1**

**தீர்மான எண்** **:** 26
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 12:-</u>

2022 - 2023-ம் நிதியாண்டிற்கு தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள் எழுது பொருட்கள் மற்றும் கணினி பயன்பாட்டிற்கு தேவையான பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. 2022-2023-ம் நிதியாண்டிறகு வரவு செலவு மதிப்பீட்டில் எழுதுபொருட்கள் செலவினத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1131 / 2021 / எச்2**

**தீர்மான எண்** **:** 27
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 13:-</u>

2020 - 2021 -ம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 31 சோலைமலை அய்யனார் கோவில் தெருவில் உள்ள

அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 11.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், நகராட்சி ஒப்பந்ததார், தேனி | 1,76,242.26 | 1,76,116.90 | 0.07 % குறைவு |
| 2 | திரு.எம்.எ.சிராஜூதீன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | | 1,77,372.00 | 0.64 % கூடுதல் |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.07 % குறைவான விலை விகிதம் கோரிய **கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 684 / 2022 / இ1**
**தீர்மான எண் :** 28
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 14:-</u>

2021 - 2022-ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ், தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அல்லிநகரம் நகராட்சி பள்ளியில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 11.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், நகராட்சி ஒப்பந்ததார், தேனி | 7,52,453.25 | 7,51,140.79 | 0.17 % குறைவு |
| 2 | திரு.எம்.எ.சிராஜுதீன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | | 7,55,810.27 | 0.44 % கூடுதல் |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.17 % குறைவான விலை விகிதம் கோரிய **கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2382 / 2021 / இ1**
**தீர்மான எண் :** 29
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 15:-</u>

2020 - 2021 -ம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 12 கக்கன்ஜி காலனியில் உள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 11.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ், நகராட்சி ஒப்பந்ததார், தேனி | 1,71,189.34 | 1,70,983.28 | 0.12 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு.எம்.எ.சிராஜுதீன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>தேனி | | 1,72,008.22 | 0.48 % கூடுதல் |

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.12 % குறைவான விலை விகிதம் கோரிய **கே.ஏ.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 684 / 2022 / இ1**
**தீர்மான எண் :** 30
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 16:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண். 32 மதுரை மெயின் ரோடு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சிட்கோ ( SIDCO ) தொழிற்பேட்டை பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுவதற்கு 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020 - 2021 - ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு 24.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 13.10.2021 அன்று பணி உத்தரவு வழங்கி பணியினை தொடங்குவற்கு சிட்கோ தொழிற்பேட்டை நிறுவன வளாகத்தின் உள்பகுதி பிரதான சாலைகளில் மட்டும் குழாய் பதிக்கப்பட இருப்பதால் மீதி இருக்கும் குழாய்களை மதுரை மெயின் ரோடு பகுதியில் Govt ITI தேனி அருகில் அமைந்துள்ள மனைப்பிரிவுகள் தற்போது வரன்முறை படுத்தி இருப்பதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு நகராட்சியில் இருந்து குடிநீர் விநியோகத்திற்கு இதுவரை பகிர்மான குழாய்கள் ஏதும் பதிக்கப்படாமல் இருப்பதால் தற்போது சிட்கோ வளாகத்தில் பதிக்கப்பட வேண்டிய பகிர்மான குழாய்களை வார்டு எண். 32-ல் தற்போது புதிதாக மனை வரன்முறை படுத்திய தெருக்களிலும், வார்டு எண். 19 கே.ஆர்.ஆர் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து சமதர்மபுரம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை, வார்டு எண். 8 பெருமாள் கோவில் தெரு, வார்டு எண். 22 சேல்ஸ் சொசைட்டி தெரு முதல் சுந்தர் தெரு வரை, வார்டு எண். 16 பழைய ஜி.ஹச் ரோடு முதல் மிராண்டா லைன் வரை, வார்டு எண். 14 ஸ்டாலின் தெரு, வார்டு எண். 12 வெங்கலா நகர் ஆகிய தெருக்களில் குடிநீர் பகிர்மான குழாயை பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி மாற்றி பதிக்கப்படுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 224 / 2021 / **இ1**
**தீர்மான எண் :** 31
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 17:-</u>

**2021-2022 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ்,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 16 வரையிலான பகுதிகளில் பொது மக்களின் தண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள மினி பவர் பம்ப்களில் ஏற்படும் பழுதுகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 9.80 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினம் ரூ. 9.80 இலட்சத்திற்கு ( ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 973 /2021/ இ2**

**தீர்மான எண் :** 32
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 18:-</u>

**2022-2023 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ்,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 33 வரையிலான பகுதிகளில் பொது மக்களின் தண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள மினி பவர் பம்ப்களில் ஏற்படும் பழுதுகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 9.80 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினம் ரூ. 9.80 இலட்சத்திற்கு ( ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பது ஆயிரம் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 974 / 2022 / இ2**
**தீர்மான எண்** **:** 33
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 19:-</u>**

தேனி- அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 33 வார்டுகளில் பொது மக்கள் தண்ணீர் பயன்பாட்டுக்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள Bore Motor -கள் கீழ்க்காணும் இடங்களில் பழுதடைந்து, பழுதுபார்த்து மறு உபயோகத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி புதிதாக மோட்டார்கள் இறக்கப்பட வேண்டியுள்ளது.

| **வ. எண்** | **தெருவின் பெயர்** |
|---|---|
| 1 | பாலன்நகர் |
| 2 | போஸ்ட் ஆபீஸ் ஓடைத்தெரு |
| 3 | நக்கீரர் தெரு |
| 4 | பழைய GH ரோடு |
| 5 | பெரியகுளம் மெயின் ரோடு |
| 6 | பாரஸ்ட் ரோடு 5 வது தெரு |
| 7 | பாரஸ்ட் ரோடு ரயில்வே லையன் |
| 8 | வெல்பர் பள்ளி தெரு, பங்களாமேடு |
| 9 | பாரஸ்ட் ரோடு 6 வது தெரு |
| 10 | மதுரை மெயின் ரோடு |
| 11 | சுப்பன் தெரு |
| 12 | ஹைஸ்கூல் தெரு |

எனவே, மேற்கண்ட பணியை மேற்கொள்ளுவதற்கும்,அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.4,30,000/- ( ரூபாய். நான்கு இலட்சத்தி முப்பதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 975 / 2022 / இ2**

**தீர்மான எண்** **:** 34
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 20:-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான N.R.Tநகர் குடிநீர் தரைமட்ட தொட்டியிலிருந்து KR.R. நகர் 2 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டிக்கு பம்பிங் செய்யப்படுவதற்காக பொருத்தப்பட்டிருந்த 5HP Submersible Motor மூலம் பம்பிங் செய்யப்படும் பொழுது தொட்டி நிரப்புவதற்கு 8 முதல் 10 மணி நேரமாகிறது. இதனால், குடிநீர் விநியோகம் செய்யப்படும் நேரம் குறைவாகவே உள்ளது. மேலும் ,இத்தொட்டியிலிருந்து தற்பொழுது போஸ்ட் ஆபீஸ் ஓடைத்தெரு, பி.டி.ஆர் மெயின் ரோடு முதல் பழைய மருத்துவமனை ரோடு ( பொதுப்பணித்துறை அலுவலகம் ) வரை உள்ள பகுதிகளை புதிதாக சேர்த்ததினால்,பம்பிங் செய்யப்படும் மோட்டாரின் திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது. எனவே, N.R.T.நகர் தரைமட்டத்தொட்டிக்கு கூடுதலாக 10 HP Motor (2 Nos ) திறன் கொண்ட மோட்டார் பம்பினை இறக்கி K.R.R.நகர் தரை மட்ட தொட்டியின் குடிநீர் நிரம்பும் நேரத்தை அதிகப்படுத்துவதற்காக இப்பணியினை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ6,50,000/- ( ரூபாய்.ஆறு இலட்சத்தி ஐம்பதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 976 / 2022 / இ2**

**தீர்மான எண்** **:** 35
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 21:-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்கள் 1 வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் போது தேனி- பெரியகுளம் மெயின் ரோடு சாலை விநாயகர் கோயில் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்து இருப்பதனை மாற்றம் செய்து பொது மக்களின் கோரிக்கைக்காக பழுதடைந்த

சின்டெக்ஸ் தொட்டி மற்றும் அதற்கான மேடை புதிதாக அமைத்து தர கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ3,80,000/-( ரூபாய். மூன்று இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 977 / 2022 / இ2**

**தீர்மான எண் :** 36
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 22:-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்கள் 4 வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் போது மச்சால் தெரு, பகவதி அம்மன் கோயில் தெரு ஆகிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்து இருப்பதனை மாற்றம் செய்து பொது மக்களின் கோரிக்கைக்காக பழுதடைந்த சின்டெக்ஸ் தொட்டி மற்றும் அதற்கான மேடை புதிதாக அமைத்து தர கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ3,80,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 978 / 2022 / இ2**

**தீர்மான எண் :** 37
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 23:-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்கள் 25 வது வார்டு பகுதியில் அடிப்படை வசதிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் போது பழைய டி.வி. எஸ் ரோடு, கண்ணாத்தாள் கோயில் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்து இருப்பதனை மாற்றம் செய்து பொது மக்களின் கோரிக்கைக்காக பழுதடைந்த சின்டெக்ஸ் தொட்டி மற்றும் அதற்கான மேடை புதிதாக அமைத்து தர கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ3,80,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 979 / 2022 / இ2**

**தீர்மான எண்** **:** 38
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 24:-</u>

தேனி- அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 29, பங்களாபட்டி ( நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி ரோடு ) மற்றும் பழைய போஸ்ட் ஆபீஸ் ரோடு ஓடைத்தெரு, ஆகிய இரு பகுதிகளில் உள்ள பொது மக்களின் கோரிக்கைக்காக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ7,60,000/- ( ரூபாய். ஏழு இலட்சத்தி அறுபதினாயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 980 / 2022 / இ2**

**தீர்மான எண்** **:** 39
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 25:-

தேனி- அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண். 6, முத்துபாலித்தெரு பகுதியில் உள்ள பொது மக்களின் கோரிக்கைக்காக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ3,80,000/- ( ரூபாய். மூன்று இலட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும் ) ஆகும். அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி **குடிநீர்** நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 981 / 2022 / இ2**
**தீர்மான எண்** **:** 40
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 26:-

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2021 - 2022 ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் வீரப்ப அய்யனார் கோவிலில் தடுப்புச்சுவர் மற்றும் பேவர் பிளாக் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|
| 1 | தினகரன் நாளிதழ், ( Kal Publications ( P ) Limited ) | 7698.00 |

மேற்கண்ட தொகை ரூ. 7698.00/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 163 / 2018 / **இ1**
**தீர்மான எண்** **:** 41
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 27:-

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2021 - 2022 ம் ஆண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ரூ.104.88 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் விநியோகம் செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்.** | **நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம்** | **தொகை ( ரூ)** |
|---|---|---|
| 1 | முரசொலி நாளிதழ், Business Standard நாளிதழ் ( Flame Advertising Company Private Limited ) | 44730.00 |

மேற்கண்ட தொகை ரூ. 44730/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 163 / 2018 / **இ1**
**தீர்மான எண்** **:** 42
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 28:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV ) அரசாணை எண்.166, நாள் 23.11.2016ன்படி நகராட்சிப்பகுதியில் உள்ள நகராட்சிப்பள்ளிகள் மற்றும் அரசுப்பள்ளிகளை சுத்தம் செய்யவும் கழிப்பறைகளை தூய்மையாக பராமரிக்கவும் 10 துப்புரவு பணியாளர்கள்

கொண்டு Sword Man Power Agency நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் மேற்படி ஒப்பந்த காலம் மே - 2022ம் மாதத்துடன் முடிவடைய உள்ளதால் சுகாதார ஆய்வாளரின் அறிக்கையின்படி, நகராட்சி பகுதியில் அமைந்துள்ள நகராட்சி பள்ளி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளையும், வகுப்பறைகளையும் சுத்தம் செய்யும் பொருட்டு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தம் கோரும் பொருட்டு தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாளர்கள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்திடவும், தேனி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.19956/2021/E2 நாள் 05.08.2021 தினக்கூலி 2021-2022 ஊதிய விகிதத்தின்படி பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய, ESI, EPF, லைப் இன்சூரன்ஸ் பிரிமியம், யூனிபர்ம்ப், பாதுகாப்பு உபகரணங்கள் சேர்த்து ஒரு வருடத்திற்கு 10 பணியாளர்களுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 967 / 2022 /எச்2**

**தீர்மான எண் :** 43
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 29:-</u>

தேனி அல்லிநகரம் நகராட்சி – பொதுசுகாதார பிரிவு – வார்டு எண் **01** முதல் **33** வரையான வார்டு பகுதிகளில் கழிப்பிட வசதி இல்லாத வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் **463** எண்ணங்கள் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண். **5990/2022**/SBM நாள்.**11.04.2022 –**ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு மத்திய அரசின் மான்யம் தொகை ரூ.**4000/–**மும் மாநில அரசின் மான்யம் தொகை ரூ.**2666/–** என ரூ.**6666/–**மும் மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.**2666/–** மும் சேர்த்து ஒரு பயனாளிக்கு மொத்தம் ரூ.**9332/–** என விகிதத்தில் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி

பங்குத்தொகை ரூ.**2666/–** வீதம் மொத்தம் **463** பயனாளிகளுக்கு ரூ.**12,34,358/–** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒரு பயனாளிக்கு ரூ.**6000/–** மான்யத்தொகையிலிருந்தும், ரூ.**2666/–** நகராட்சி பங்குத்தொகை வருவாய் நிதியிலிருந்தும் மொத்தம் ரூ.**9332/–** என்ற விகிதத்தில் **463** பயனாளிகளுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4885 / 2015 /எச்2**

**தீர்மான எண் :** 44
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 30:-</u>

தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரம் கிராமம் பொட்டல்களம் Ph-I சர்வே வார்டு –B, பிளாக்–7ல் நகரளவை எண். **3/3**B, **3/4**, **3/5**B, **3/6**B, **3/8**, **3/9**, **3/10**, **3/11** பழைய சர்வே எண்கள் **(**1459/3,1463,1465/5,1466/2,1466/1,1465/2,3pt, 1466/3A pt, 1466/3B pt) மற்றும் வார்டு–B, பிளாக் எண்.**13** ல் நகரளவை எண்கள்.4/2B, 3/2 A , 5/1 ,5/2 A,5/3, 6/2 பழைய சர்வே எண்கள் . 2052/ pt, (2052/ pt தற்போதைய சர்வே எண்.2047/1pt, 2050/pt) (2047/3,2049/3-தற்போதைய சர்வே எண்.2050/2pt), 2049/1, 2049/2, 2048) இல் 15.11 ஏக்கர் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உயோக பகுதியிலிருந்து பொது குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரை அவர்களின் கடிதத்தின் மூலம் நாளிதழில் பிரசுரம் செய்ய விண்ணப்பம் செய்யப்பட்டு அதன்படி மாவட்ட மக்கள் செய்தி அலுவலர் அவர்களுக்கு **12.04.2022** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் **20.04.2022**ம் தேதி செய்தி வெளியிடப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களுக்கு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதும் பொது மக்களிடம் இருந்து **30** நாட்களுக்குள் இவ்வலுவலகத்தில் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து பொது குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்கள் மூலம் நகர் ஊரமைப்பு துறைக்கு கடிதம் அனுப்ப அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 253 / 2021 / எப்–1**

**தீர்மான எண்** **:** 45
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 31:-

தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரம் கிராமம் பொட்டல்களம் Ph-II , வார்டு –B, பிளாக்–7 நகரளவை எண்கள் . 2/1A, 2/1B1, 2/1B2, 2/4A, 2/4B, 3/6A1, 3/6A2A பழைய சர்வே எண்கள். 1465/2PT, (1465/2PT- தற்போதைய சர்வே எண்.1465/1BPT), 1465/3PT,(1465/3PT- தற்போதைய சர்வே எண். 1465/4PT), 1466/3APT, (1465/2, 3PT, 1466/3PT- தற்போதைய சர்வேஎண். 1465/2PT)ல் **6.69** ஏக்கர் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உயோக பகுதியிலிருந்து பொது குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரை அவர்களின் கடிதத்தின் மூலம் நாளிதழில் பிரசுரம் செய்ய விண்ணப்பம் செய்யப்பட்டு அதன்படி மாவட்ட மக்கள் செய்தி அலுவலா் அவர்களுக்கு **12.04.2022** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் **20.04.2022**ம் தேதி செய்தி வெளியிடப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களுக்கு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதும் பொது மக்களிடம் இருந்து **30** நாட்களுக்குள் இவ்வலுவலகத்தில் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து பொது குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்கள் மூலம் நகர் ஊரமைப்பு துறைக்கு கடிதம் அனுப்ப அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 254 / 2021 / எப்–1**

**தீர்மான எண்** **:** 46
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 32:-

தேனி - அல்லிநகரம் நகராட்சி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி

திரு. T. தவமணி என்பவர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க.எண் 2929/2021/இ3 நாள். 12.10.2021ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து உரிய உத்தரவு எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதியும் தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு. T. தவமணி மூலம் ஏற்கெனவே அளித்து வரும் அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே மே, ஜீன் மற்றும் ஜீலை 2022 மாதம் பராமரிப்பதற்கும், இடைப்பட்ட காலத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரது வழிகாட்டு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்த தெரிவிக்கும் பட்சத்தில் அதன்படி மேற்கொள்ளவும், இம்மூன்று மாதங்களுக்கான செலவினம் மாதம் ரூ 2.50 இலட்சம் வீதம் ரூ 7.50 இலட்சம் செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2224/ 2021 / இ3**
**தீர்மான எண் :** 47
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 33:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி கழிவுநீர் திட்ட உந்து நிலையம், சாலையோர துணை கழிவுநீர் உந்து நிலையம், கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள், ஆள் இறங்கு தொட்டிகள் பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி திரு. T. தவமணி என்பவர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள், உந்து நிலையம், ஆள் இறங்கு தொட்டிகள் பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க.எண். 2929/2021/இ3 நாள். 12.10.2021ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது. நகராட்சி

நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து உரிய உத்தரவு எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதியும் தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் திரு. T. தவமணி மூலம் ஏற்கெனவே அளித்து வரும் அதே ஒப்பந்தப்புள்ளி விலைக்கே மே, ஜீன் மற்றும் ஜீலை 2022 மாதம் பராமரிப்பதற்கும், இடைப்பட்ட காலத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரது வழிகாட்டு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்த தெரிவிக்கும் பட்சத்தில் அதன்படி மேற்கொள்ளவும், இம்மூன்று மாதங்களுக்கான செலவினம் மாதம் ரூ 2.90 இலட்சம் வீதம் ரூ 8.70 இலட்சம் செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2223/ 2021 / இ3**
**தீர்மான எண் :** 48
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 34:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 - ம் ஆண்டு 15 வது நிதிக்குழு திட்டத்தில் ( Tied Grant ) திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான 4 எண்ணம் LCV வாகனங்கள் வாங்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 29.03.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணி செய்வதற்கு கீழ்கண்ட 3 நிறுவங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. M/s. Krysttal Motors ( P ) Ltd, Salem
2. M/s. K.J.Motors, Hosur.
3. M/s. Lawrence Automotive ( P ) Ltd, Poonamalle, Chennai.

மேற்படி பணிக்கு வரப்பெற்ற 3 நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்காணும் 2 நிறுவனங்கள் மட்டுமே தொழில் நுட்ப ஆவணங்கள் ஒப்பந்த

விதிகளுக்கு உட்பட்டு இருந்தது. மேற்படி நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் உள்பட ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s. Krysttal Motors ( P ) Ltd, Salem | 32,00,000.00 | 31,99,600.00 | 0.01 % குறைவு |
| 2 | M/s.Lawrence Automotive ( P ) Ltd, Poonamalle, Chennai | | 32,19,680.00 | 0.62 % கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு:–**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M/s. Krysttal Motors ( P ) Ltd, Salem** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 224 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 49
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 35:-

2021 - 2022 -ம் ஆண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ரூ.104.88 இலட்சம் மதிப்பீட்டில் சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 11.05.2022-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூ ) ( வரிகள் உட்பட ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் உட்பட ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | DHANSHITH TRADING AGENCIES, TRICHY | 1,04,88,000.00 | 1,04,32,500.00 | 0.53 % குறைவு |
| 2 | S.R Enterprises, Trichy, Thuraiyur | | 1,21,00,000.00 | 15.37 % கூடுதல் |

<u>அலுவலகக்குறிப்பு</u> **:–**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.53 % குறைவான விலை விகிதம் கோரிய **DHANSHITH TRADING AGENCIES, TRICHY** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 683 / 2022 / இ1**
**தீர்மான எண் :** 50
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 36:-</u>

தேனி மாவட்டத்தில் 30.04.2022 ம் தேதியன்று அரசு சார்ப்பில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தல் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வரவேற்பு செய்து கீழ்கண்ட நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்ட வேண்டிய நிறுவனத்தின் விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ், | 21480.00 |
| 2 | தினமலர் நாளிதழ் | 18480.00 |
| 3 | உள்ளாட்சி சாரல் நாளிதழ் | 29400.00 |
| 4 | தினகரன் நாளிதழ் | 16779.00 |

மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> **:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** : 163 / 2018 / **இ1**
**தீர்மான எண் :** 51
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 37:-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகள் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் பராமரிப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி M/s. சடையாண்டி ஏஜென்ஸீஸ், ஆண்டிபட்டி நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகர்ப்பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிக்க தேவையான பணியாளர்கள் தனியார் மூலம் பெறுவதற்கு உரிய பிரேரணை தயார் செய்யப்பட்டு இவ்வலுவலக ந.க.எண். 2989/2021/இ2 நாள். 12.10.2021 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்நோக்கப்பட்டு உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து உரிய உத்தரவு வரப்பெறாததாலும் பணியின் அவசர அவசியம் கருதியும் தற்பொழுது பராமரித்து வரும் ஒப்பந்ததாரர் M/s. சடையாண்டி ஏஜென்ஸீஸ், ஆண்டிபட்டி நிறுவனத்தின்மூலம் ஏற்கெனவே அளித்து வரும் ஒப்பந்தப்புள்ளி விலைக்கே மே, ஜீன் மற்றும் ஜுலை 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு பராமரிப்பதற்கும், இடைப்பட்ட காலத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரது வழிகாட்டு நெறிமுறைகள நடைமுறைப்படுத்த தெரிவிக்கும் பட்சத்தில் அதன்படி மேற்கொள்ளவும் இம்மூன்று மாதங்களுக்கான உத்தேசச்செலவினம் மாதம் ரூ 2.80 இலட்சம் மூன்று மாதங்களுக்கு ரூ 8.40 இலட்சம் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் ( வருவாய் நிதி ) இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1208/ 2017 / இ2**
**தீர்மான எண் :** 52
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 38:-</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.28369/2018/ஜே3 நாள் 22.11.2018 உத்தரவின்படி இந்நகராட்சிப்பகுதிகளில் உள்ள 33 வார்டு பகுதி முழுவதும் முதல்நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்த்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதாரப்பணிகள் ஆகிய பணிகளுக்கு வெளிக்கொணர்வு முறையில் 06.02.2019-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 01.03.2019 முதல்

28.02.2022 வரையுள்ள காலத்திற்கு 50 தனியார் தூய்மை பணியாளர்கள் பொன்.ராமர் நிறுவனம் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகர்மன்றத்தீர்மான எண்.2144 நாள் 07.01.2022-ன்படி மூன்று மாத காலம் 01.03.2022 முதல் 31.05.2022 முடிய நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு ந.க.எண்.3660/2018/எச்1 நாள் 29.12.2021-ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021-ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்கள் ஒப்பந்த அடிப்படையில் வரப்பட்டுள்ள பொது வழி முறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள அதாவது நியமனம் செய்ய வேண்டிய அளவுகோலின்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.2053 நாள் 18.11.2021-ல் அனுமதி பெற்றுள்ள 119 பற்றாக்குறை பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க கோரி கருத்துரு இவ்வலுவலக ந.க.எண்.2949/2021/எச்1 நாள் 18.11.2021ன்படிஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துப்புரவு ஆய்வாளரின் 19.05.2022-ம் தேதிய அறிக்கையின்படி, தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை குறித்து அளவுகோலின்படி வரையறுத்து நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கக்கோரி கருத்துரு ந.க.எண்.2949/2021/எச்1 நாள் 18.11.2021-ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி பெறப்படும் வகையில் தற்போது பார்த்து வந்த பொன்.ராமர் நிறுவனத்திடமிருந்து 50 தனியார் தூய்மை பணியாளர்களைக்கொண்டு பணிகளை மேற்கொள்ள மூன்று மாத காலம் (01.06.2022 முதல் 31.08.2022 வரை) நீட்டிப்பு செய்யவும் அல்லது நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அனுமதி வழங்கும் வரையில் இதில் எது முன்னமோ அது வரையில் தற்போது பார்த்து வருகின்ற பொன்.ராமர் நிறுவனத்திடமிருந்து பணியாளர்களைக்கொண்டு பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அதற்கான செலவு தொகை ரூ.19.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3660 / 2018 /எச்1**

**தீர்மான எண் :** 53

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 39:-</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.28369/2018/ஜே3 நாள் 22.11.2018 உத்தரவின்படி இந்நகராட்சிப்பகுதிகளில் உள்ள 33 வார்டு பகுதி முழுவதும் முதல்நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்த்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதாரப்பணிகள் ஆகிய பணிகளுக்கு வெளிக்கொணர்வு முறையில் 21.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 01.01.2021 முதல் 31.12.2021 வரையுள்ள காலத்திற்கு 50 தனியார் தூய்மை பணியாளர்கள் பொன். ராமர் நிறுவனம் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகர்மன்ற தீர்மான எண்.2203 நாள் 25.01.2022-ன்படி இரண்டு மாத காலம் 01.04.2022 முதல் 31.05.2022 முடிய நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு ந.க.எண்.2736/2019/எச்1 நாள் 31.03.2022ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள் 02.10.2021-ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்கள் ஒப்பந்த அடிப்படையில் வரப்பட்டுள்ள பொது வழி முறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள அதாவது நியமனம் செய்ய வேண்டிய அளவுகோலின்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.2053 நாள் 18.11.2021-ல் அனுமதி பெற்றுள்ள 119 பற்றாக்குறை பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க கோரி கருத்துரு இவ்வலுவலக ந.க.எண்.2949/2021/எச்1 நாள் 18.11.2021ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துப்புரவு ஆய்வாளரின் 19.05.2022-ம் தேதிய அறிக்கையின்படி, தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை குறித்து அளவுகோலின்படி வரையறுத்து நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்கக்கோரி கருத்துரு ந.க.எண்.2949/2021/எச்1 நாள் 18.11.2021-ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி பெறப்படும் வகையில் தற்போது பார்த்து வந்த பொன்.ராமர் நிறுவனத்திடமிருந்து 50 தனியார் தூய்மை பணியாளர்களைக்கொண்டு பணிகளை மேற்கொள்ள மூன்று மாத காலம் (01.06.2022 முதல் 31.08.2022 வரை) நீட்டிப்பு செய்யவும் அல்லது நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அனுமதி வழங்கும் வரையில் இதில் எது முன்னமோ அது வரையில் தற்போது பார்த்து வருகின்ற பொன்.ராமர் நிறுவனத்திடமிருந்து பணியாளர்களைக்கொண்டு பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அதற்கான செலவுத்தொகை ரூ.21.40 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2736 / 2019 /எச்1**

**தீர்மான எண் :** 54
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
தேனி -அல்லிநகரம் நகராட்சி